சிறப்பிதழ்
**Special Issue**

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

**3-4பங்குனி 2052**
**16th - 17th March 2021**

**ISSN : 2321 - 984X**

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
வீராச்சிபாளையம், சங்ககிரி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

***Published by***
**RAJA PUBLICATIONS**
**10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.**
**Mobile : +91-9600535241**
**website : rajapublications.com**

**19** பகுதி-5
Part -5

மற்றொன்று:

## செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்

ஏப்ரல் - ஜூன்

ஜூலை - செப்டம்பர்

அக்டோபர்- டிசம்பர்

Journal of

## Classical Thamizh

**(A Quarterly International Multi lataral Thamizh Journal)**

January - March

April - June

July - September

October - December

ISSN:2321-0737

# புறநானூற்றில் அன்பும் அறனும்

நா. ஸ்ரீரேகா
உதவிப்பேராசிரியர், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),
எளையாம்பாளையம், திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

## ஆய்வின் நோக்கம்

எட்டுத்தொகை நூல்களில் புறம் பற்றிக் கூறும் முதன்மையான நூலகத் திகழ்வது புறநானூறு. இதில் சங்க காலத்தில் புறநானூற்றில் உள்ள அன்பு, பண்பு, அறம், வாழ்க்கை நடத்தும் முறை பற்றியும், இல்வாழ்க்கையில் இல்லறத்தின் மாண்பு, வாழ்வின் செம்மை, விருந்தோம்பல் போன்றவற்றை பற்றி எடுத்து உரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

## முன்னுரை

சங்க இலக்கியம் எனக் கூறப்பெறும் பாட்டும் தொகையும் சங்க கால மக்களின் வாழ்கை வரலாற்றை எடுத்துக்கூறும் வகையில் அமைந்துள்ளது. அகக்கருத்தையும், புறக்கருத்தையும் புணர்ந்து நிற்கும் அழியாத அழகு ஓவியம் எனலாம். புறநானூற்றில் சங்ககால வாழ்க்கை முறை, மக்களின் உணவு, தொழில், பழக்க வழக்கங்கள், அன்பும், அறனும், விருந்தோம்பல், உயர்ந்த இல்லற வாழ்வு பற்றி விளக்கியமையைக் காண்கிறோம்.

## உலகம் தழுவிய அன்பு

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்
இனிது என மகிழ்தன்றும் இலமே"
(புறம்-192)

என்று உலகம் தழுவிய அன்பை அடிப்படையாக கொண்டு திகழ்கின்றது.

எல்லா ஊரும் எமக்குச் சொந்த ஊர்தான். எல்லோரும் எமக்கு உறவினர்தான். தீமையும் நன்மையும் பிறரால் வருவன அல்ல. அவை தாமே வருவன. துன்புறுவதும் துன்பம் தவிர்தலும் அதைப் போன்றவைதான். அதாவது துன்பமும் இன்பமும் பிறரால் வருவன அல்ல, அவையும் தாமே வருவனதான். சாதல் என்பது புதியது இல்லை. வாழ்தல் இனிமையானது என்று மகிழ்வதும் இல்லை என்று கணியன் பூங்குன்றனார் உலக இயல்பைப் பற்றி தம் கருத்தை இப்பாடலில் கூறியுள்ளார்.

தேவருலகம் ஒத்தநாடு தம்முடையது என்றாலும் எப்போதும் தொடர்ந்து உரிமையாய் இல்லாமல், அது வேற்றோராயினும் தவஞ் செய்தோர்க்கே உரியதாகிறது. இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி, தமக்கென உள்ள நாள்வரை வாழ்தல் வேண்டும்.

"நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தவமே யாயினும் தம்மோடு செல்லர்
வேற்றோர் ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்
ஏற்ப பார்ப்பார்க்கு ஈரங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல் படச் சொரிந்து"
(புறம்-367)

என்று வாழச் செய்த நல்வினை அல்லது ஆழுங்காலைப் புணை பிரிவதில்லை என ஔவையார் கூறும் அறம் சமயத்திற்கு உரியதாகிறது.

## அறநிலை

அறம் செய்தலைப் பற்றிக் கூறுவது அறத்தத்துவம் எனப்படும். மனிதன் வாழ்நாளில் ஈட்டிய செல்வம் முழுவதும் அவன் இறக்கின்ற போது அவனோடு வருவதில்லை. அது மற்றவர்களுக்கு உரியதாகிறது, ஆனால்

இறப்பவன் வாழ்நாளில் செய்கின்ற அறமும் புகழும் நிலை கொண்ட அவன் உயிர் மேலோகத்திற்குப் போகும் போது அவை தீமைக்கும் நன்மைக்கும் துணை நிற்பனவாகும். இதைப்பற்றி

"அறவினை யன்றே விழுத்துணை யத்துணைப்
புனைகை விட்டோர்க் கரிதே துணையழத்
தொக்குயிர் வௌவுங் காலை
இக்கரை நின்றிவார்ந் துக்கத்தை கௌலே"
(புறம்-357)

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

**அன்பும் பண்பும்**

"பண்பாடு" என்னும் சொல் மிக அண்மைக் காலத்தில் உருவானதாகும். சங்க இலக்கியங்களிலோ அவற்றிற்குப் பிற்பட்ட இலக்கியங்களிலோ அச்சொல் இடம்பெறவில்லை. 'பண்பு' என்ற சொல்லே தொன்று தொட்டு வழக்கில் இருந்து வந்துள்ளது தொல்காப்பியத்தில் பல இடங்களில் 'பண்பு' என்ற சொல் அமைந்துள்ளது.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

உள்ளத்தில் அன்பு உடையவர்களே உயிரோடு வாழ்வோராகக் கருதப்படுவர். அஃது இல்லாதோர் உயிர் இருந்தும் உயிரற்ற பிணமாகவே கருதப்படுவர். அன்பு இல்லையேல் இல்லறம் பயன் பெறாது என்பது கருத்து என்று திருக்குறளில் நாம் காண்கிறோம்.

"பாடறிந்து ஒழுகும் பண்பினாரே" என்ற புறநானூற்றடிக்கு "சிறிய ஊரையுடைய வேந்தராயினும் எம்மிடத்துச் செய்யும் முறைமையை அறிந்து நடக்கும் குணத்தினையுடையோர்தான்" என்று பழைய உரை கூறுகின்றது.

இங்கு 'பண்பினார்' என்பது குணமுடையவர் என்ற பொருளைக் குறிக்கின்றது.

"பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்" என்பது கலித்தொகை அடி 'பண்பு' என்ற சொல்லுக்கு விளக்கத்தை தருகிறது.

**இல்வாழ்க்கை**

தலைவனும், தலைவியும் மேற்கொள்ளும் அறம், பொருள், இன்பங்களால் இல்வாழ்க்கை சிறப்புறுவதாகும்.

"அறம், பொருள், இன்பங்களில் வாழாமல் தன் குலத்திற்கேற்ற மண வாழ்க்கையைத் தலைவன் தான் நடத்துவதற்கும்" என்று இளம்பூரணார் இவ்வடிக்கும் பொருள் கூறுவது குறிப்பிடத்தக்கது.

"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிபடுஉம் தோற்றம் போல
இருகுடை யின்பட போங்கிய ஒருகுடை"
(புறம்-31)

இதனால் அறத்தின் வழியே ஆற்றும் பொருளும் இன்பமுமே சிறப்படையும் என்பது தெளிவாகிறது.

கணவன் மனைவியிடத்து வேரூன்றி வளரும் அன்பு நாளடைவில் தம் மக்கள், உற்றார், உறவினர், சமுதாயத்தினர் ஆகிய பலரிடமும் பரவி அமைந்து பல அறங்களுக்கு வழிகோலுவதாகும்.

தன் மனைவி துன்புறுவதைப் பொறுக்கலாற்றாது தான் சேரமான் குடகோச் சேரலிரும்பொறையிடம் வந்ததாகப் பெருங்குன்றூர்கிழார் கூறுகிறார்.

"மனைத்தொலைந் திருந்தவென் வானுதற்
படர்ந்தே" (புறம்-211)

மனைவியிடத்து வறுமையுற்றிருந்த என்னுடைய ஒளி பொருந்திய நுதலையுடைய மனைவியை நினைத்து வந்தனர் என்பது இவ்வடியின் பொருள்.

குடகோச் சேரலிரும் பொறையை வாழ்த்திப் பொருள் பெற்று தன் மனைவியின் வறுமைத் துன்பத்தை தீர்க்க வேண்டுமென்பது புலவர் கருத்து.

இவ்வாறே வறுமையால் வாடும் தம் மனைவியின் துன்பத்தைக் கண்டு அதைத் தீர்த்தற்

பொருட்டுப் பெருந்தலைச் சாத்தனார் குமணனிடம் வந்ததாகப் பாடுகிறார்.

"மனையயோள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படந்திசினே நற்போர்க் குமண"
(புறம்-164)

வேள் எவ்வி என்ற தலைவன் தன் மனைவியால் பேரன்பு கொண்டவன் என்பதைத் 'தன்னமலர் காதலி' என வெள்ளெருக்கிலையார் என்ற புலவர் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு இல்வாழ்க்கை பற்றி மேற்கொண்ட கணவர் தத்தம் மனைவியரிடத்து அன்புடையவராய் ஒழுகினார்.

### இல்லறத்தின் மாண்பு

அன்பு பண்பாகவும், அறம் பயனாகவும் அமைவது இல்வாழ்க்கை. பண்டைத் தமிழர் திருமண வாழ்வை இல்லறம் என்பர். அகவாழ்க்கையின் மனம் ஒத்த அன்பே இல்வாழ்வின் தலையாய பண்பு என்று கருதினர்.

உயிர் கலந்து ஒன்றிய பழமையான நட்புடன் குற்றமற்ற அன்பினால் ஒன்றுபட உள்ளமுடனும் தலைவனும் தலைவியும் வாழ்ந்தனர். தலைவனும் தலைவியும் உடலும் உயிரும் போல இயைந்த அன்புடை இல்லற மேம்பாட்டினை,

"யாக்கைக்கு உயிரியைத் தன்ன நட்பின்
வாழ்தல் அன்ன காதல்
சாதன் அன்ன பிரிவறி யோனே"
(அகம்-339)

என்று அகநானூறு காட்டுகின்றது.

### வாழ்வின் செம்மை

அன்பே சிறந்த வாழ்க்கை அமைய அடிப்படைக் காரணமாக இருப்பதாகும். கணவனும், மனைவியும் ஒத்த அன்பினைக் கொண்டிருந்தாலே சிறப்பான வாழ்க்கை வாழ முடியும். ஒருவர் மற்றவர் மீது அன்பு காட்டுவதன் மூலம்தான் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் அதுவே வாழ்க்கை செம்மைக்கு உதவியாக இருக்கும். புறநானூற்றில்,

"வெயிலென முனியேன் பனியென படியேன்
கல்குயின் றன்ன என்நலிகூர் வளிமறை
நாணலது இல்லாக் கற்பின் வானுதல்
மெல்லில் குறுமகள் உள்ளிச்
செல்வம் அத்தை, சிறக்க நின் நாளே"
(புறம்-196)

என்ற பாடலில் கணவன், மனைவி இருவரிடையே அன்பும், பரிவும் நிலவுவதை காணமுடிகிறது.

### இல்லறத்தில் கணவன் மனைவியின் அன்பு உள்ளம்

கணவன் மீது அன்பு கொண்டு இறந்த காரணத்தால்தான் பெண்கள் தங்கள் கணவன் இறந்தவுடன் அவன் உடலை எரிக்கும் தீயில் தானும் வீழ்ந்து உயிர் துறப்பதை விரும்பினர். கணவன் இன்றித் தனக்கு வாழ்வில்லை என அவள் நினைக்கிறாள். எனவே தானும் உயிர்விடத் துணிகிறாள். இச்செய்தியை,

"அணில்வரிக் கொடுங்காயி வாள்போழ்ந்திட்ட
காழ்போல் நல்வியர் நறுநெய் தீண்டாது
அடைக்கிடைக் கிடந்த அகபிழிபிண்டம்
அவள் என் சாந்தொடு புளிப்பெய்து அட்ட"
(புறம்-246)

என்ற பாடலின் மூலம் மனைவி கணவன் மீது கொண்டிருந்த அன்பு புலனாகிறது.

### விருந்தோம்பல்

தம்மை நாடி வரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று உண்டி முதலியவைகளை அளித்து மிக்க அன்போடும், ஆர்வத்தோடும் அவர்களை உபசரிப்பது இல்வாழ்க்கைக்குரிய தலைசிறந்த பண்பாகப் பழந்தமிழகம் போற்றியது.

புறநானூற்றில் வருநர்க்கு உரையா, வருவிந்தயரும், முதலிய சொற்றொடர்கள் விருந்தினர் என்பவர் புதியவர் என்பதை உணர்த்துகின்றன.

வரும் விருந்தினருக்கு சுவையான உணவளித்து விருந்தோம்புவதே பழியற்ற வாழக்கை என்பதை,

"வருநர்க்கு உரையா வசையிலி வாழ்க்கை"
(புறம்-10)

என்ற அடியால் ஊன்பொதி பாசாங்குடையார் புலவர் அறிவுறுத்துகிறார்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"
(குறள் - 81)

போருக்குச் சென்றிருந்த வீரன் ஒருவனின் மனைவி தனக்குரிய அறத்தை வீட்டின் கண் இருந்து செய்து வந்தாள். அப்பொழுது அவர் தன் வீட்டிற்கு விருந்தினராக வந்த பாணனிடம் பொழுது மறைந்தது என்னிடம் இருப்பது பழைய முயற்கறியாக இருந்தாலும் தருகிறேன். அதனை உண்டு இங்கேயே இருந்து செல்க என்று உபசரிக்கிறாள். இதனை,

"படலை முன்சிற் சிறுதிணை யுணங்கல்
பறவு மிதனு மறவு முண்கெனப்
பெயிதற் கெல்லின்று பொழுதே யதனால்
முயல் சுட்ட வாயினுந் தருகுவோம் புகுதந்
தங்கிருந் தீமோ முதுவார் பாண"
(புறம்-319)

என்ற பாடலில் காணலாம்.

முடிவுரை

சங்க இலக்கியம் அகம், புறம் என்ற இரு பிரிவுகளை உடையது. அக வாழ்க்கை கணவனும் மனைவியும் மேற்கொள்ளும் அறம், பொருள், இன்பத்தினால் இல்வாழ்க்கை சிறப்புறுவதாகும்.

அன்பும், அறனும் பெற்று இல்வாழ்க்கை சிறப்புற அமைய வேண்டும். மனைமாட்சி கணவன் - மனைவி அன்பு உள்ளம், விருந்தோம்பல், இல்லறம் போன்ற நிகழ்வுகளில் அகம், புறம் இரண்டும் கலந்து இருக்கின்றன என்பதை அறிய முடிகிறது.

துணை நூற்பட்டியல்


1. துரைசாமிப் பிள்ளை, ஔவை. சு, புறநானூறு மூலமும் உரையும், தொகுதி1, 11. திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை.
2. மாணிக்கவாசகன். ஞா. புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை-600001, முதற்பதிப்பு - செப்டம்பர்-1998.
3. சுப்பிரமணியன். ச. வே, சங்க இலக்கியம் - எட்டுத்தொகை தொகுதி-3, புறநானூறு. மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை சென்னை-600108. முதற்பதிப்பு-21, சூன்-2010.
4. மது. ச. விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாறு, முல்லை நிலையம், தி. நகர், சென்னை -17. பதிப்பு-2012.
5. மு. வரதராசன், திருக்குறள், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம் லிட், சென்னை-18, முதற்பதிப்பு-மே 1949.


ഗ